கடலூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை: திரு.தி.சு.பாலசுப்ரமணியன், எம்.எஸ்ஸி(விவ)

என். அ2/11953/2020 நாள்: 06.07.2021

பொருள் : பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் செல்வி.அ.சி.கலைசெல்வி, இளநிலை உதவியாளர் (பிணையம்) வேளாண்மை விரிவாக்க மையம், தூக்கணாம்பாக்கம், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், கடலூர் – இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்.

பார்வை: 1. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண் அறிபி6/118992/2016, நாள்: 07.12.2017.
2. அரசு ஆணை (நிலை) எண் 48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு ( கியூ 1) துறை , நாள்: 26.02.2021.
3. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் க.எண். அறிபி1/141664/2019, நாள்: 21.04.2021.

\+++

ஆணை:

சென்னை, தலைமைப் பொறியாளர் (வே.பொ) கட்டுப்பாட்டில், கடலூர், பாசன பகுதி மேம்பாட்டு திட்டம் உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தில் இளநிலை வரை தொழில் அலுவலர் ஆக பணியாற்றிய திரு.அ.சந்திரகாசன் அவர்கள் பணியிலிருக்கும்போது 10.11.2008 அன்று இயற்கை எய்தியதை தொடர்ந்து அன்னாரது வாரிசு / மகள் செல்வி.அ.சி.கலைசெல்வி அவர்களுக்கு பார்வை (1)–ல் காணும் சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையின் வாயிலாக கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக பணிநியமனம் வழங்கி கடலூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது. இதனை தொடர்ந்து இவ்வலுவலக செயல்முறை ஆணை எண் அ2/16467/17, நாள்: 08.01.2018–ன் வாயிலாக கடலூர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டில், தூக்கணாம்பாக்கம், வேளாண்மை விரிவாக்க மையத்தில் இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது. இதன்படி செல்வி.அ.சி.கலைசெல்வி அவர்கள் கடலூர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டில் இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக 04.01.2018 முற்பகல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

Scanned with CamScanner

2) செல்வி.அ.சி.கலைசெல்வி, இளநிலை உதவியாளர் (பிணையம்) அவர்களது ஆவணங்களை கவனமுடன் பரிசிலனை செய்தும் மற்றும் பார்வை (2) ல் காணும் அரசு ஆணை மற்றும் பார்வை (3)-ல் காணும் சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்கள் கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றியும் செல்வி.அ.சி.கலைசெல்வி அவர்களுக்கு தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வேளாண்மை துறையில் 04.01.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணிவரன்முறை செய்வதற்கு அப்பதவிக்குரிய உடல்தகுதியினை தனியர் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரை பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

3) செல்வி.அ.சி.கலைசெல்வி அவர்கள் 04.01.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிணயம்) பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை முடிக்க வேண்டும். மேலும் பவானிசாகர் அடிப்படை பயிற்சி முடித்த பின்னரே தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்படும். தகுதிகாண் பருவம் முடித்ததை தொடர்ந்து இரண்டாவது மற்றும் அதனை தொடர்ந்து காலமுறை ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவராகிறார்.

வேளாண்மை இணை இயக்குநர்,
கடலூர்.

பெறுநர்

செல்வி.அ.சி.கலைசெல்வி

இளநிலை உதவியாளர் (பிணையம்),

வேளாண்மை விரிவாக்க மையம், தூக்கணாம்பாக்கம்,

வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், கடலூர்.

வழி மற்றும் நகல்: வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், கடலூர்.

நகல்: வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது. (அறிபி பிரிவிற்கு)

நகல்: பணிப்பதிவேட்டிற்கு

நகல்: இருப்புக் கோப்பிற்கு

உதிரி-1

Scanned with CamScanner